இது தவிர, தருமபுரி பகுதியில் மொத்தம் 8 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 குளிர்பதனக் கிடங்குகள் தனியாரால் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எனவே, இப்பகுதி விவசாயிகள் உபரியாக உள்ள வேளாண் விளைபொருட்களை மேலே கண்ட அரசு மற்றும் தனியார் குளிர்பதனக் கிடங்குகளில் வைத்து, சந்தையில் கூடுதலான விலைக்கு விற்பதற்கு ஏதுவான சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள், பாப்பாரப்பட்டியிலே ஒரு கிடங்கு அமைக்கப்படுமா என்று கோரியிருக்கிறார்கள். மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, துறையின் மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, பாப்பாரப்பட்டியிலே ஒரு கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 369, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

369—

கால்நடை மருத்துவமனை

***18564—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், திருவாப்பாடியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட

2014 ஆகஸ்ட் 7]

திருவாப்பாடி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளதால், மேற்படி கிராமத்திலே கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக் கூறுகள் உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வரும் நிதியாண்டில், அங்கே ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் வயிறும், அரை வயிறும் பசியாற கால்நடையாய் நடந்து திரிந்த ஏழை மக்களின் வறுமையைப் போக்கி, வயிறார பசி தீர, கறவை மாடுகள், ஆடுகள் தந்த மனித குலம் போற்றும் மாதரசி! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட திருவாப்பாடி சுற்று வட்டாரப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவும், வாயில்லா ஜீவன்களான கால்நடைகளின் நலன் கருதியும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் திருவாப்பாடியில் புதிய கால்நடை மருந்தகம் அமைத்துத் தர, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்வேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாக நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 370, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.